**செய்தி வெளியீடு எண்: 044** **நாள் : 27.01.2015**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

தொழில்முனைவோா் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் உடன் இணைந்து 112 கல்லூரிகளில் தொழில்முனைவோா் விழிர்புணர்வு பயிற்சி நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சியானது ICT Academy மூலமாக செயல்படுத்தப்படவுள்ளது.

தொழில்முனைவோா் விழிப்புணர்வு பயிற்சியானது 27.01.2015 முதல் ஆரம்பித்து 20000–30000 மாணவர்களை சென்றடையும். இது மூன்று கட்டமாக நடைபெறும். முதல்கட்ட பயிற்சியானது 1/2 நாளும், இரண்டாவது கட்ட பயிற்சியானது ஒரு கல்லூரிக்கு 20 மாணவர்கள் வீதம் 5 நாட்கள் நடைபெறும். இதன்போது புதிய வியாபார உத்திகள் தொழிலை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியின்போது இணையதளம் மூலமாக மாணவர்களின் செயல்திறன்கணிக்கப்படும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 224 மாணவர்கள் 3 ஆம் கட்ட பயிற்சிக்கு எடுத்து செல்லப்படுவார்கள் சென்னையிலுள்ள முக்கிய தொழில் முனைவோர்கள் மற்றும் முதலீடு செய்பவர்கள் ஆகியவர்களை சந்திப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி தரப்படும்.

இந்த 3 கட்ட தொழில்முனைவோர்க்கான விழிப்புணர்வு பயிற்சியானது முதன்முறையாக தமிழகமெங்கும் உள்ள கல்லூரிகளில் நடைபெறுகிறது. மேலும் எதிர்காலத்தில் அதிக எண்ணிக்கையிலான கல்லூரிகளை சேர்ப்பதற்கான திட்டங்கள் விரிவுப்படுத்தப்படும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**